திருப்பந்தணைநல்லூர்

ஆலய வரலாறு

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்."

— திருக்குறள்.

ஆலய வெளியீடு

1956

உ


திருச்சிற்றம்பலம்

தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலூகா

திருப்பந்தணைநல்லூர்

ஸ்ரீ பசுபதீஸ்வரர்

ஆலய வரலாற்றுச் சுருக்கமும், பதிகங்களும்.



பரம்பரை டிரஸ்டி

திரு. P. பெத்துராஜன் அவர்கள்

பந்தணைநல்லூர்.


ஆக்கியோன்

ஆலய நிர்வாக அதிகாரி,

பந்தணைநல்லூர்.

விலை 0—8—0

பந்தணைக் கோட்டை நிலப்படம்.



பின்பக்கம் பார்க்க

பந்தணைக் கோட்டை நிலப்படம்.

1. பந்தநல்லூர் போலீஸ் ஸ்டேஷன்
2. அணைக்கரை — குத்தாலம் பஸ் ரஸ்தா.
3. காம்பீலி மன்னன் வீதி.
4. கோட்டை ஆஞ்சநேயர் சன்னிதி.
5. கோட்டை விநாயகர் சந்நிதி.
6. காமபீலி மன்னன் வீதி.
7. திருக்குளம்.
8. முன்கோபுரம.
9. ஸ்ரீ பசுபதீஸ்வரர் சன்னிதி.
10. காமபீலி மன்னன் வீதி.
11. ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் முன்வீதி.
12. ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் சன்னிதி.
13. செமபியன் மாதேவியார் வீதி.
14. இராச ராச சகஸ்ரபாகு வீதி.
15. ஆதிசசபிள்ளை வீதி.
16. பரகேசரிவர்மன் வீதி.
17. அரண்மனைத் திடல்.
18. திறநதவெளித் திடல்.
19. தேர்முட்டி.
20. இராணி மாடம.
21. தென்னை இலுப்பை மாந்தோப்புகள்.
22. கோட்டை மேடு.
23. அகழிகள்.

முன்னுரை

பொதுமக்களும், யாத்திரிகர்களும், பக்தர்களும், மற்றும் சிறுவர் சிறுமியர்களும் ஆலய வரலாற்றை அறிந்துகொள்ள விரும்புவது இயல்பு. ஆண்டவன் திருவிளையாடல்கள் தலத்துக்குத் தலம் மாறுபடும். ஒவ்வொன்றையும் படித்து அறிந்து பக்தியால் பாடிப் பரவசமடையப் பல மெய்யன்பர்கள் ஆசைப்படுகின்றனர். அவ்விருப்பத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஆலய நிர்வாகத்தினர்பால் பட்டமையின் எமது தலைவர்கள் சுற்றறிக்கை மூலம் வரலாற்றுச் சுருக்கம் ஒன்றை வெளியிடக் கட்டளையிட்டனர்.

சென்ற சில மாதங்களாக ஆலயத்தில் தேவார வகுப்பு ஆரம்பம் செய்து ஆலயத் தேவார ஆசிரியரால் சுமார் பதினைந்து பிள்ளைகளுக்கு முறைப்படி தேவாரம் கற்பிக்கப்பட்டுவருகிறது. மேலும் எமது விருப்பத்துக்கிணங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை நாலு மணிக்குத் திருப்பந்தணைநல்லூர் "ஸ்ரீபசுபதி உயர்தர ஆரம்ப பாடசாலை", "கழக ஆரம்பப்பள்ளி" ஆகிய இரண்டு பாட்சாலை ஆசிரியர்களும், மாணவ மாணவிகளுமாகச் சுமார் நானூற்றுவர் வாரக் கூட்டுவழிபாடு செய்துவருகின்றனர். ஆசிரியர்களின் ஒத்துழைப்பும், சிறுவர்களின் வளர்ச்சியான உற்சாகமும், பொதுமக்களின் அன்புநிறைந்த கனிவும் இவண் போற்றற்பாலன. அன்னோர்க்கு இத்தலத்தின் சுருக்க வரலாறும், இத்தலத் தேவாரம், திருப்புகழ், அருட்பா, இதர பக்திவிளக்கப் பாடல்கள் இவற்றை அறிவித்துவைக்கும் உணர்ச்சி கலந்த கடமையின்பாற்பட்டும் விரைவில் இவ்வெளியீட்டை அளிக்க


முன்வந்தேன். படித்தின்புற்று, பண்புபெற்று, பக்தியால் பாடி மக்கள் சன்மார்க்க நெறியில் சிறப்பாராகில சென்னை H. R. & C. E. இலாகா ஆணையாளர் திரு. A. உத்தண்டராம பிள்ளை, I. A. S. அவர்கள், துணை ஆணையாளர் திரு. S கணேசம பிள்ளை, B A. அவர்கள், மேலத்தஞ்சை உதவி ஆணையாளர் திரு. A. சாக்கரைச் சேர்வை, B. , B. L, அவர்கள் ஆகிய மூவர் நோக்கமும், முயற்சியும் மிகக பலன் தருவதாகும்

மற்றும் இத்தலச் சருக்கம் வெளியிடும் முயற்சியில் செய்யுளில் தல வரலாறு குறிக்கும் கையெழுத்துப் பிரதியைக் கொடுத்துப் பெரிதும் துணைபுரிந்த பந்தணைநல்லூர் திரு. நாகலிங்கம் செட்டியார் அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன். சில ஏடுகள் குறிப்பும், தலக்குறிப்பும் கொடுத்துதவிய பந்தணைநல்லூர் திரு முத்தையா பிள்ளை அவர் களுக்கும், ஓலைச்சுவடியை வாசித்துக் காண்பித்த திரு. நாகலிங்க பண்டாரத்துக்கும் என் நன்றி உரித்தாகுக. அன்றியும் கல் வெட்டுகளை முயன்று படித்து விளங்கும் தமிழில் எழுதிக் கொடுத்த திரு. வை சுந்தரேச வாண்டையார் அவர்களுக்குத் தம் பல நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். மற்றும் பலசில குறிப்புகளைத் தந்துதவிய பலருக்கும் என் அன்பும் நன்றியும் உரியதாகும். மேலும் சிறப்புப்பாயிரம் வழங்கி பிழை திருத்தி வெளியீட்டை அழகு அமைத்து அச்சேற்ற பேருதவி செய்த சித்தாந்த சைவமணி, திருவாவடுதுறை ஆதீன வித்வான் திரு. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களுக்கும் என் பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருப்பந்தணைநல்லூர்
18—1—1956.

T N பாஸ்கரம் பிள்ளை,
நிர்வாக அதிகாரி

திருப்பந்தணைநல்லூர் ஆலயங்களின் நிலப்படம்.



பின்பக்கம் பார்க்க.

திருப்பந்தணைநல்லூர்
ஆலயங்களின் நிலப்படம்.

1. காமபீலி மன்னன் வீதி
2. கம்போச மன்னன் காந்தன் துறை
3. திருக்குளம்
4 நீராழி மண்டபம்
5. நந்தி மண்டபம்
6. ஞானசம்பந்தன் வாயில்
7. கொடிமரம்
8. பலிபீடம்
9. நந்தி
10 இராமலிங்கம் திருவாயில்
11. திருக்கல்யாண மண்டபம்
12. நாவுக்கரசன் வாயில்
13. ஸ்ரீ பசுபதீஸ்வரர்
14. அருணகிரிவாயில் + ஆறுமுகப்பெருமான்
15 ஸ்ரீ கல்யாணசுந்தரமூர்த்தி
16. ஸ்ரீ உத்சவ சுப்ரமண்யர்
17. வெள்ளிவாகன அறை
18. ஸ்ரீ சோமாஸ் கந்தா
19 மடப்பள்ளி
20. மாலைகட்டி அறை
21. அறுபத்துமூவர் சந்நிதி
22. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி
23. சட்டநாதர்
24. ஸ்ரீ விநாயகர்
25. ஸ்ரீ முருகன்
26. ஸ்ரீ கஜலக்ஷ்மி
27. ஸ்ரீ அன்னபூர்ணி
28 ஸ்ரீ சரஸ்வதி
29. ஸ்ரீ துர்க்கை
30. தலவிருக்ஷம் சரக்கொன்றை
31. ஸ்ரீ சண்டிகேசுரர்
32. ஸ்ரீ நடராஜர்
33. நெல் மணடபம்
34. நவக்கிரகம
35. வசந்த மண்டபம
36. மௌனகுருவாயில்
37. ஸ்ரீ தோளியம்மை
38. ஸ்ரீ கண்வர் பூசித்த லிங்கம்
39. ஊஞ்சல் மணடபம்
40. நெல் குத்தும் மண்டபம்
41. பிரகார நந்தவனம்
42. யாகசாலை
43. தேவஸ்தான காரியாலயம்
44. ஸ்டோர ரூம
45. கோட்டை முனியாண்டவர் சன்னிதி
46 சிப்பந்திகளின் விடுதிகள்
47. do do
48. காமபீலி மன்னன் வீதி
49. ஸ்ரீ பெருமாள் முன்வீதி
50. பெருமாள் கோபுர (முனவாசல்
51. பலிபீடம
52. கொடிமரம
53. கருட மண்டபம
54. ஸ்ரீ ஆதிகேசவப பெருமாள்
55. ஸ்ரீ சீனிவாசப் பெருமாள்
56. மடப்பள்ளி
57. வசந்த மணடபம
58. ஸ்ரீ பரிமளவல்லித் தாயார்
59. பிரகார நநதவனம
60. தோட்டம
61. நந்தவனம.

உ

சிவமயம்

திருப்பந்தணைநல்லூர் ஆலய வரலாறு

அன்பே வடிவாய்க்கொண்டு விளங்கும் இறைவன் ஆன்ம கோடிகள் தம்மை வழிபட்டுய்யும் வண்ணம் கோவில் கொண்டு விளங்குகின்ற திருத்தலங்கள் நம் தென்னாட்டில் பலவுண்டு. அவற்றுள் காவிரி வளம்பெருக்கும் சோழ நாட்டில், தஞ்சை ஜில்லா, கும்பகோணம் தாலூகாவிலுள்ள திருப்பந்தணைநல்லூர் கும்பகோணத்திலிருந்து பதினெட்டாவது மைலில் பஸ் தொடர்பு கொண்டும், குற்றாலத்திலிருந்து ஆறுகல் தொலைவில் பஸ்தொடர்பு கொண்டும், கொள்ளிடம் நதிக்குத் தென்பாலும் மண்ணி எனும் புண்ணிய நதிக்கு வடபாலும் அமைந்து மரகத மலைக்கூட்டம் போன்ற காட்சியினிடையில் ஊரினின்று ஒதுங்கித் தனியே நாற்புறமும் அகழிசூழத் திகழும் திருத்தலமாகும்.

இத்தலத்தின் பல பெயர்கள்

1. தென்கயிலை
2. கோவூர்
3. கொன்றைவனம்
4. பானுபுரம்—கதிரோன்புரி
5. விட்டுணுபுரம் விண்டோ—வேணுபுரி
6. இந்திரபுரி
7. கண்ணுவராசசிரமம்
8. ஸ்ரீநகர்
9. அன்னமிடுமெய்ப்பேரூர்
10. கந்துகாபுரி
11. ஆவூர்
12. பந்தணைநல்லூர்

என்பன.

ஆண்டவன் பெயர் – ஸ்ரீ பசுபதீஸ்வரர்

அம்பிகை பெயர் – 1. வேணுபுஜாம்பிகை
2. காம்பேய் தோளி

பெருமாள் பெயர் – ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள்

தாயார் பெயா – பரிமளவல்லித்தாயாா

மூலக்கோவிலாகிய ஸ்ரீ பசுபதீஸ்வரா ஆலயமும், துணைக கோவிலாகிய ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் ஆலயமும் ஒரே பொது மதிலுக்கு இருமருங்கிலும சுறறுப் பெருமதில்களைக்கொணடு தனித்தனியே கிழக்கு நோக்கி அமைநதுள்ளன.

பூஜைகள்:– தினபூஜை:– ஆறுகாலம.

மாத உற்சவங்கள்:– சகலமும

பிரமோத்ஸவம்:– மாசிமாதம் மகநட்சத்திரம்.

தீாத்தம்:– சூரிய தீர்த்தம. நாறபுறமும மதில்களுடனும் நடுவில் நீராழி மண்டபத்துடனும மூலக்கோவிலாகிய சிவன கோவிலுக்கு எதிரில் அமைந்திருக்கிறது.

தலத்தின்தரு:– சரக்கொன்றை: சிவன் கோவில் உட்பிரகாரத்தில வடககுப் பக்கம மூலவருககு இடது பாரிசத்தில் மேடைமீது அலங்காரமாயக காடசியளிககிறது

வாகனங்கள:– மர வாகனங்கள் யாவறறுடனும, மரப் பல்லககுகளும உணடு. மேலும இரண்டு வெள்ளிக காளைவாகனங்கள்: ஒரு வெள்ளி மயில்வாகனம: ஒரு வெள்ளிப் பல்லககு முதலியனவும உண்டு.

தோகள்:– சுவாமிக்கு ஒன்றும, அமபிகைக்கு ஒன்றுமாகத் தனித்தனியே உண்டு. ஆணடுதோறும மாசிமக உறசவத்தில் தேரோட்டம நடைபெறுகிறது.

கோட்டையுள்ளே சென்றதும் கோயிலின் முழுத்தோற்றம்



" சிவ சிவ "

திருஆபரணங்கள்:– போதுமான அளவு சிறந்த ஆபரணங்கள் இருககின்றன சர்க்கார் ஆபரண மதிப்பீட்டாளாகள் அண்மையில் பரிசோதித்து அவற்றை மதிப்பிட்டிருக்கின்றனா.

சொத்துக்கள்:– நன்செய் நூறு (100) வேலி. புன்செய் முபபது (30) வேலி. கட்டிடங்கள், மனைக்கட்டுகள் பல உண்டு. ரொக்க இருப்பு சாக்காரக் கடன் பத்திரங்களிலும், பாங்கிகளிலுமாகச சுமார் (1¼) ஒன்றேகால இலடச ரூபாய் இருக்கிறது.

ஆண்டு வருமானம்·– ரூ. 78000.

சென்ற சில மாதங்களாகப் பால்காவடித் தொண்டா நியமிக்கப்பட்டுச சுறறுவட்ட கிராமங்களில் பால்சேகரம் செய்தும் பசுக்கள் வளர்பபதன் மூலம பால் பெறபபடடும ஆண்டவனுக்கு அபிஷேக ஆராதனைக்குப் போதுமான அளவு உபயோகித்துக் கொண்டு எஞ்சியதைத் தேவாரவகுப்புச் சிறுர்களுக்கு சுண்டல் தோசை இவைகளுடன பகிாந்தளிக்கப்படுகின்றது. தேவையான குங்குமம கோவிலிலேயே தனி மஞ்சளால் செய்யப்படுகிறது.

நந்தவனம்·— சிறபபாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது

திருப்பணிகள்:– முக்கியமாயச செய்யவேண்டிய பல திட்டங்கள் துணை ஆணையாளா அவாகளால் அங்கீகாரம செய்யப்பட்டு வேலை துவக்கபபட்டு வருகிறது.

நூல் நிலையம்:– பொதுமககளுக்குக கடவுட் பக்தியும, சமய அறிவும, தமிழ் அறிவும வளாககும வகையில் கோயிலைச்சார்ந்த நூல் நிலையம் ஒனறு அமைககபபெற்றுளளது இப்போது சுமாா 250 அசசுப்புத்தகங்கள் வரை சேர்க்கப்பட்டுள்ளன. மக்கள் நாடோறும படித்துப பயன்பெற்று வருகின்றனர்

கல்வெட்டுகள்:– பேசும கறகளும, சிரிக்கும கற்களும் பல உண்டு.

திரு வை. சுந்தரேச வாண்டையார் எனும் அறிஞர் படித்துக் குறித்துக்கொடுத்ததாய் உணரப்படும் கல்வெட்டுச் சுருக்கம் சரித்திர காலத்துப் பிற்காலச் சோழர் கல்வெட்டுக்களிலிருந்து நிர்வாகம்பற்றிய சிற்சில குறிப்புகள் கிடைக்கின்றன. வேளாண் குடியினர் ஒருவர் இச்சிற்றூரில் சீருஞ் சிறப்புமாய் வாழ்ந்தனரெனக் காணப்படுகிறது. வீரசோழ அணுக்கர் கைக்கோளர் வேளான் பெருங்குடி மகனும் ஆகிய மூவரும் இக்கோவில் நிர்வாகத்தை ஏற்று நிலங்களைக் கண்காணித்து வந்தனர். ஆனால், கண்காணிப்பு செவ்வியின் இன்மையால் கண்காணிப்பு குடிமக்களிடமே மாற்றப்பட்டதாகப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் செங்கோலோச்சியவனும் இராசராச மாபுரம் என்ற கலைக் குன்றும் தாராசுரம் கோவிலை எழுப்பியவனுமான இரண்டாம் இராசராசன் காலத்துப் பந்தணைநல்லூர்க் கல்வெட்டொன்று கூறுகிறது.

இத்தலத்து ஆதிகேசவப்பெருமாள் கோயில் கருக்கிரகச் சுவரின் வெளிப்புறங்களில் இக்கல்வெட்டு உள்ளது.

காட்டூர் கோமடத்திலிருந்த தக்ஷிணாமூர்த்தி பட்டர் மகன் நம்பிபட்டரும் அவருடைய மனைவியும் இக்கோவிலில் காலை மாலை இருபொழுதும் தீபம் போடவேண்டிப் பந்தணைநல்லூரில் வாழ்ந்த திருவையாறுச் சிவலோகன் என்னும் அந்தணரிடம் இரண்டு காசைக் கொடுத்திருந்தார்கள். இது சிவன்கோயில் மகா மண்டபம் தென்புறச் சுவரிலுள்ள இராசகேசரிவர்மன் காலக் கல்வெட்டு.

உத்தம சோழதேவருடைய தாய் செம்பியன்மாதேவியார் விளக்கு ஒன்றுக்குப் பன்னிரு கழஞ்சாக மூன்று விளக்குகளுக்கு முப்பத்தாறு கழஞ்சுப்பொன்னை முதலாம் இராசராசன் அரியணை ஏறிய பதினொன்றாம் ஆண்டில் அதாவது கி. பி. 996-ல் அளித்தார். அதை ஏற்று நடத்தியவன் ஹாஸ்யன் விக்கிரமாதித்த ராசராச நாடகப் பெரியன். நிபந்தப்படி இவன் நாள் ஒன்றுக்கு மூன்று உழக்கு நறுநெய் செலுத்தி வந்தான். இவனுக்குப் பின்

இவன் குமாரர்களும், அவர்களுக்குப் பின் அவர்கள் மருமகனும், நடத்திய பின்னர் பலர் அந்த உரிமையை விலைக்கு வாங்கியும், அத்தர்மத்தைச் செவ்வனே நடத்தி வந்திருக்கின்றனர். இது பன்னிரண்டாம் நூற்றாண்டு விக்கிரமசோழன் காலத்தில் மகாமண்டபம் தென் சுவரில் உள்ள கல்வெட்டு.

பந்தணைநல்லூர் ஆதிச்சப்பிள்ளை என்னும் பெருமகனார் மூன்றாம் குலோத்துங்கன் அரியணை ஏறிய இருபத்துநாலாவது ஆண்டுப் பதினாலாம் நாளில் ஆண்டவனுக்குத் திருஉத்தரீயம், பூணூல் இவைகளின் பொருட்டு எட்டு மாற்றுக் கழஞ்சுப் பொன்னைக் கொடுத்துள்ளனர். இது மகாமண்டபத்தின் தென் புறமுள்ள மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு.

மூன்றாம் குலோத்துங்கன் அரியணை ஏறிய முப்பத்து ஒன்பதாம் ஆண்டில் வாரணாசிப் பிச்சைமடத்து ஒருவர் ஆண்டவனுக்குத் திருமஞ்சன காலத்திலே சாத்துவதற்குக் குவளை செய்ய நாலு மாப்பொன்னைக் கொடுத்தருளினார். இது மூலக் கோவிலின் தென்புறமுள்ள மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு.

இராசகேசரிவர்மன் திரிபுவனச்சக்கரவர்த்தி இராசாதிராச தேவர் அரியணை ஏறிய ஐந்தாம் ஆண்டில் இராமேசுரமுடையான் சதாசிவ தேவனான இராசராச சகஸ்ரபாகு என்பான் திருவீதியின் பொருட்டு நிலம் வழங்கியுள்ளான். இந்நிலம் இவனது அண்ணன் இராமேசுரமுடையான் சோழப் பல்லவராயனுடையதாகும். இது அர்த்த மண்டபத்தின் வடபுறத்திலுள்ள மேற்சொன்ன இராசாதிராச தேவரின் கல்வெட்டு.

கொள்ளிடத்துக்குத் தெற்கு, பழவாற்றுக்கு வடக்கு, திருவாப்பாடிப் பெருவழிக்குக் கிழக்கு, திருமுல்லைவாசலுக்கு மேற்கு இதற்குட்பட்ட சீமை, வயிரவநயினார்மகனார் க்ஷேத்திரபாலகருக்குக் கணக்கப்பேராக மாத்தூரில் ஆறுவேலி நிலத்தைக் கி. பி. 1530-ல் இறையிலியாகக் கொடுத்தார். இது மூலக் கருக் கோவிலின் வடபுறமுள்ள அச்சுததேவ மகாராயர் கல்வெட்டு.

ஸ்ரீ பசுபதீஸ்வரருக்காக அரசன் பரகேசரிவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி இராசராசதேவா கோனேரின்மை கொண்டான் என்பவன் திருவாபரணம் செய்ய ஒதுக்கிவைத்திருந்த பொன்னில் ஒரு பகுதியை இக்கோவில் சிவப்பிராமணா சிலா கூறிட்டுக் கொண்ட குறறத்திற்காக இசசிவ பிராமணாகளும அவாகள் வமசத்தாரும கோவிலில் புகுதல்கூடாதென்று ஆக்ஞையிட்டு 180காசு அபராதம விதித்துத் திருப்பணிககுச் சோத்துககொண்டான். இக்கட்டளை இமமன்னன அரியணை ஏறிய ஆறும ஆண்டு ஐமபத்தைநதாம நாளில் நிகழ்நதது. இது மகாமண்டபம வடபுறம உள்ள கல்வெட்டு.


முதலாம இராஜராஜன் காலத்தில்(கி. பி. 985–கி பி 1012) இக்கோயிலில் நட்டுவப்பங்கு மெய்மட்டிப்பங்கு முதலியவைகளை உடையவனாக இருநதவன் இராஜராஜ நாடகப்பிரியன் என்று பாராட்டப்படுகிறான். இராஜராஜ நாடகத்தில் இவனுக்கிருநத பெரும்புலமையை விளககுவதாகும இவனுடைய இபபட்டம.

கல்வெட்டுக்களைப் பாதுகாத்துவநதவிதம் :– “பழங்கல் வெட்டிற்கண்டபடி” யென்று முதலில் எழுதப்பெறறு அதன் கீழ் “ஸ்வஸ்தி ஸ்ரீ கோராஜ கேசரிவாமறகு யாண்டு பத்து, பநதணைநல்லூா பசுபதி தேவாககு” என்று தொடங்கும ஒரு கல்வெட்டு அா்த்த மண்டபத்தின தென்புறத்தில் உள்ளது. இக் கல்வெட்டு மூலம ஒரு கோவிலை புதுப்பிக்கும்போது பழைய கல்வெட்டையும அப்படியே புதுககல்லில் வெட்டிவைத்துக் கோவில கட்டும வழககம முனபு இருநததாக அறியககிடக்கிறது.

கல்வெட்டுக்களிலிருந்து பெறப்படும் இதர குறிப்புகள·– வழுதளம்பட்டி சாவடிககருகில் உள்ள ஊாககோவிலுககுககொடுத்த தாமம பறறியதாகப புலபபடுகிறது ஒரு கலவெட்டு.

காலிங்கன் எல்லனது புகழைப்பாடும கல்வெட்டுககள பல இருக்கின்றன.

திருக்குளம் - காம்போச மன்னன் துறை
தொல்வினை போககும் புணணிய கட்டம்



முன்கோபுரமாம காவியம் - இலவமரஙகள் மறைக்கின்றன.

புராணச் சுருக்கம்.

உலகத்தாய் மலைமகளாம் பார்வதி பந்தாட விரும்பிப் பரமனை வேண்ட அவனும் நான்கு வேதங்களையும் பந்துகளாக்கி விளையாடக் கொடுத்தருளினன். விண்ணுலகில் தோழிகளுடன் மாலை வேளையில் பார்வதியும் பந்தாடினார். விளையாட்டுக்கிடர் விளைக்க விரும்பாத ஞாயிறு புனலாடி மறையாது நீண்டபொழுது நிலைக்கலாயிற்று. அன்னைக்கு விண்ணப்பித்து உலக இயக்கத்துக்கு நேர்ந்த தடையை விலக்கச் சென்ற நாரதரையும் பின்பு நேரில் சென்ற அண்ணல் சிவபெருமானையும் அன்னையார் கவனிக்கவில்லை: விளையாட்டு உற்சாகம்போலும் அதனால் முகம் சிவந்த இறைவன் உருமாறிக் காலனை உதைத்த காலால் பந்தை எற்றி மண்ணுலகுக்கு அனுப்பிச் சென்றார். பந்தைக் காணாத அன்னையார் ஞானக்கண் விழிக்க, நடந்தயாவும் அறிந்து தெருண்டார். சென்று ஆண்டவனை வணங்கினார். எனினும், சபிக்கப்பட்டார் பண்பு தவறிய குற்றத்திற்காக. பின் இறைவன் ஆணைப்படி உமை பசுவுருக்கொண்டுவர, தமையன் கேசவன் மாட்டிடையனாய்ப் பின் தொடர மண்ணுலகிற் போந்து, பந்து வீழ்ந்தணைந்த கொன்றைக் காட்டில் சரக்கொன்றை மரநிழலில் சுயம்புலிங்கமாய் இருந்த புற்றின்மேல் யாருமறியாமல் கேசவனுங்கூட அறியாதபடி பாலைச் சொரிந்து வழிபட்டுக் காட்டில் மேய்ந்து வாழ்ந்து வந்தனர். கேசவனும் உறுதுணையாய மாட்டிடையனாக அறச்சேரி கிராமக் காட்டிலோர் புறம் தவம் செய்துவந்த கண்ணுவமுனிவர் ஆச்சிரமத்தில் அடுத்துக் காலங்கழிக்கலாயிற்று.

தன் ஆச்சிரம நிழலில் அண்டிவாழும் மாட்டிடையனும் கேசவன் தன் பூசனைக்குப் பாற்கொடாத நிலையில் கண்ணுவமுனிவர் உசாவ, கேசவனும் பின்பு பசுவைக் கவனிக்கலானான். ஒருநாள் கொன்றைக்காட்டிலே சுயம்புலிங்கத்தின்மேல் பால்சொரியும் தன் பசுவைக்கண்ட கேசவன் கோலால் அடிக்க அதுவும் துள்ளிப் புற்றை மிதித்தது அன்னை தன்னுருக்கொண்டாள். பாம்பணைப் பெருமான் பந்தணைந்த காட்டில் மாட்டிடையனுரு நீங்கி, ஆதி கேசவனாகி அரவமணிந்தோன் மருங்கில் கோயில் கொண்டான்.

புற்றின் முடியில், விண்ணினின்று வீழ்ந்த பந்தணைந்த சுவடும் பசுமிதித்தாகிய குளம்படிச் சுவடும் இன்றும் நமக்குக் காட்சி அளிக்கின்றன.

பின்னர் ஆரமுலை ஏந்திய அத்தனைக்காதலித்திடும் நம்மன்னை வடக்கு நோக்கியமர்ந்து கைலாயநாதனை நோக்கித் தவமிருக்க, அவரும் அவளை ஏற்றுக்கொண்டனர். கண்ணுவ முனிவரும் மற்றையோரும் கண்டு களிக்கத் தேவியைத் திருமணம் செய்து கொண்டு, பசுபதி என்னும் திருநாமத்தோடு இத்தலத்தே எழுந்தருளாநிற்கின்றனர்.

ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள், கண்ணுவர், வாலி, இந்திரன், பிரமன், சூரியன் முதலியோர் இத்தலத்து இறைவனைப் பூசித்து இஷ்டசித்தி பெற்றிருக்கின்றனர்.

காம்பிலி நாட்டரசன் பூபதி சூடாமணியின் மைந்தன் பிறவிக்குருடனாயிருந்தான். பல [illegible] சிகிச்சை செய்தான். குருடு நீங்காமையால், [illegible] வந்து மணிநதியில் நீராடுவித்து அப்பனைப் பூசித்து தரிசனம் செய்துவைக்கக் குருடு நீங்கியது. பாலனுக்குப் 'பசுபதி' என்று பெயரிட்டான். சில காலம் இத்தலத்திலேயே தங்கியிருந்தான். [illegible] கண்ணுவரால் கட்டப்பெற்றுச் [illegible] திருப்பி வந்து மாமுனிவன் கட்டியபடி ஆலயத் திருப்பணிகளை முதன்முதல் செய்து நிறைவேற்றி வீடுபேறு பெற்றான்.

சையகிரி நாட்டின் அனைப்புரத்து மிருத்துஞ்சயன் என்னும் மறையவன் பசுவைக் கொன்ற பாவத்தால் குட்டரோகமடைந்தான். பல தலங்களில் வழிபடும் அது தீராது, இங்கு வந்து வழிபட்டு அப்பெருநோய் நீங்கிப் பெருவாழ்வெய்தினன்.

காம்போச தேச மன்னன் காந்தன் என்பவன் ஆலயத்தின் எதிரிலுள்ள சூரிய தீர்த்தத்தில் முழுகி, ஒரு மண்டலம் தங்கி, இறைவனைப் பூசித்துத் தன் நோய் நீங்கப்பெற்றான்.

வித்தியாவதி என்ற விலைமகள், இச்சூரியதீர்த்தத்தில் மூழ்கி, ஆண்டவனை வழிபட்டுப் பாவம் நீங்கப்பெற்றுப் பேரின்ப வீடெய்தினாள்.

துருவ தேச மன்னன் வீரதுரந்தரன் இத்தலத்தில் வந்து வழிபட்டு மக்கட்பேறெய்தினன்

சிறந்த, காட்டில் ஆண்டவன் புற்றுருவினனாக விளங்கினான். விண்ணகத்துப் பந்தும் மண்ணகத்துப் புற்றின்மீது வீழ்ந்தது. அன்று புற்றின்மீது கோயிலில்லை. காம்பிலி அரசன் கோவில் கட்டினான். பின்பு கோவிலைப்பெரிதாக்கிக் கருங்கல்லால் கட்டியது யார்? விண்ணேறிய கோபுரங்களைச் சமைத்தது யார்? கோட்டையைப் படைத்தது யார்? ஆழ்ந்த அகழிகளையும் மாய்ந்து வரும் மாடமாளிகைச் சின்னங்களையும், பொறியெறியும் கற்குண்டுகளையும் கண்டோர் திக்கெட்டிலும் புகழ்படைத்த சோழர் குலமே ஆம், என்றால் சிந்தையெல்லாம், தோள்களெல்லாம் பூரிப்பால் விம்முமன்றோ! ஆராய்ச்சியாளர்க்குப் பந்தணைக் கோட்டையிலே ஒரு பெருவிருந்து உண்டு

“ ஆர்க்கிமிடீஸ் என்பவர் சைரக்யூசில் உரோமரது முற்றுகையை எதிர்க்கப் பலவகை எந்திரங்களைக் கண்டுபிடித்தார். அவையெல்லாம் “ யவனப்பொறிகள் ” என்ற பெயரோடு தமிழ் நாட்டுக் கோட்டைகளில் இடம் பெற்று விளங்கின ” என்று திரு தெ. பொ. மீ. அவர்கள் கூறுகின்றனர். மண்ணுக்கடியில் பந்தணைக்கோட்டையில் ஆயிரக்கணக்கில் அடுக்கடுக்காய்ப் புதைந்து கிடக்கும் கற்குண்டுகள் சுமார் 9 ரகங்களும் இங்கு வைக்கப் பட்ட சோழர் காலத்து யவனப்பொறிகள் எறிவதற்காகச் சேகரித்த குண்டுகளோ? அறியேம். புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவிற்கு இச்செய்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் காலம் விளக்குமவரை பொறுத்திருப்போம். அக்கற்குண்டு களிற்சில பொதுமக்கள் பார்த்து மகிழும்படி காட்சியாக நிலைப் பெட்டியில் அடுக்கிவைக்கப்பட்டுள்ளன.

பதிகங்கள்:— ஆறாம் நூற்றாண்டில் அப்பராகிய நாவுக்கரசர் பத்துத் திருத்தாண்டகங்களில் எம்பிரான் பசுபதிமேல் அமுதப் பிரவாகம் பொழிந்திருக்கிறார்; அள்ளிக்குடிப்பீர்.

அதே காலத்திலே தமிழ் ஞானசம்பந்தர் சரக்கொன்றை நிழலில் அமர்ந்த சீதமதிச்சடையோனை, வண்டிருந்து பண்பாடும் பந்தணைநல்லூர் எம்பெருமானை, குளிர்வாயால் தண்டமிழால் குளிர்வித்த பதிகங்கள் பத்தும் செந்தமிழ்க்கிலக்கியமாய்ச் செறிந்துகிடக்கின்றன. நாத்திக வெப்பத்தில் புழுங்குவோர் தங்க அவையெல்லாம் தருநிழலாம் என்பதில் ஐயமில்லை.

பதினைந்தாம் நூற்றாண்டில் அருணகிரியார் இத்தலத்து இறைவன் மருங்கில், தினைவனந்தனில் வாழ்வள்ளி நாயகி வளர்தனம்புதை மார்பழகனும், கிளிமொழி மங்கையிருவர் மருங்கில் நிற்கச் செம்பொன் மாமயில்மேலேறிய கோலனுக் காட்சியளிக்கும் ஆறுமுகப்பிரானை ஏழு திருப்புகழ்களில் அனைவருறப் பாடி ஆனந்த பரவசராய் அமுதமந்திர ஞானோபதேசம் வேண்டிப் பிரார்த்தித்து இசைவெள்ளத்தின் மடைதிறந்துவிட்டிருக்கிறார்; மூழ்குவோர் மூழ்குக.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமரச சன்மார்க்கத்தை வளர்த்த அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அன்பு வள்ளல் இராமலிங்கசுவாமி எம்பிரான்மேல் இரண்டு வரிகளிலே தமிழ் முழக்கம் செய்துவிட்டார். அவ்வொலியை என்றென்றும் காதுளோர் கேட்க, கருத்துளோர் உணர்க.

மற்றும் சமீபகாலத்தில் திருப்பட்டீஸ்வரம் ஸ்ரீ மௌன குரு ஸ்வாமிகள் பந்தணைநல்லூர் பெருமானை உள்ளம் நெக்குருகும் பதினொருபாக்களாலும், காம்பனைய தோளியைப் பன்னிரண்டு பெரும்பாக்களாலும் குழைந்து பாடியருளியிருக்கிறார். இவ்வைவர் பாடல்களும் அன்பையும், சமயப்பற்றையும், இன்தமிழையும் குழைத்தூட்டவல்ல இசைப்பாக்களாய் இருக்கின்றன.

ஏளடிருந்து பண்பாடிக் கொண்டிருக்கும்
பநதணை நலலூா எமபெருமான்



மககளிசைககும் செல்லபபெயா - பசுபதியாா

காதலாகிக் கசிந்து, கண்ணீர்மல்கி, ஓதியுணர்ந்து மக்கள் நன்னெறியில் உய்யச் சிறந்த அமுதமயமாய்ச் சமயகுரவர்கள் நமக்கு அளிக்கப்பட்டவை தேவார திருவாசகங்களே.

" இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவாந் தற்று ".

திருச்சிற்றம்பலம்.



திருப்பந்தணைநல்லூர்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த

தேவாரம்

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

இடறினார் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை
    யிவைசொல்லி யுலகெழுந் தேத்தக்
கடறினா ராவர் காற்றுளா ராவர்
    காதலித் துறைதரு கோயில்
கொடிறனார் யாதுங் குறைவிலார் தாம்போய்க்
    கோவணங் கொண்டு கூத்தாடும்
படிறனார் போலும் பந்தணை நல்லூர்
    நின்றவெம் பசுபதி யாரே. [1]

சுழியுளா ரெனவுங் கடலுளா ரெனவுங்
    காட்டுளார் நாட்டுளா ரெனவும்
வழியுளா ரெனவு மலையுளா ரெனவு
    மண்ணுளார் விண்ணுளா ரெனவுஞ்
சுழியுளா ரெனவுஞ் சுவடுதா மறியார்
    தொண்டர்வாய் வந்தன சொல்லும்
பழியுளார் போலும் பந்தணை நல்லூர்
    நின்றவெம் பசுபதி யாரே. [2]

காட்டினு ரெனவு நாட்டினு ரெனவுங்
கடுந்தொழிற் காலனைக் காலால்
வீட்டினு ரெனவுஞ் சாந்தவெண் ணீறு
பூசியோர் வெண்மதி சடைமேற்
சூட்டினு ரெனவுஞ் சுவடுதா மறியார்
சொலலுள சொலலுநால் வேதப்
பாட்டினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. [3]

முருகினார் பொழில்சூ ழுலகினு ரேத்த
மொய்த்தபல் கணங்களின் றுயர்கண்
டுருகினா ராகி யுறுதிபோந் துள்ள
மொண்மையா லொளிதிகழ் மேனி
கருகினா ரெல்லாங் கைதொழு தேத்தக்
கடலுணஞ் சமுதமா வாங்கிப்
பருகினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. [4]

பொன்னினார் கொன்றை யிருவடங் கிடந்து
பொறிகிளர் பூணநூல் புரள
மின்னினா ருருவின் மிளிர்வதோ ரரவ
மேவுவெண் ணீறுமெய் பூசித்
துன்னினார் நால்வர்க் கறமமர்ந் தருளித்
தொன்மையார் தோற்றமுங் கேடும்
பன்னினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. [5]

ஒண்பொனா ரனைய வண்ணல்வாழ் கெனவு
முமையவள் கணவன்வாழ் கெனவும்
அண்பினார் பிரியா ரல்லுநன் பகலு
மடியவ ரடியிணை தொழவே
நண்பினா ரெல்லாம் நல்லரென் றேத்த
வல்லவர் தீயரென் றேத்தும்
பண்பினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. [6]

எற்றினு ரேது மிடைகொள்வா ரில்லை
யிருநிலம வானுல கெல்லை
தெறறினா தஙகள காரண மாகச்
செருமலைந தடியிணை சேர்வான்
முறறினா வாழு முமமதில வேவ
மூவிலைச சூலமு மழுவும
பறறினா போலும பநதணை நலலூா
நினறவெம பசுபதி யாரே. [7]

ஒலிசெய்த குழலின முழவம தியமப
வோசையா லாட லருத
கலிசெயத பூதங கையினு லிடவே
காலினுற பாயதலு மரககன
வலிகொளவா புலியி னுரிகொள்வ ரேனை
வாழவுநன ருனுமோர் தலையில
பலிகொளவா போலும பநதணை நலலூா
நினறவெம பசுபதி யாரே. [8]


சேறறினா பொயகைத் தாமரை யானு
செஙகணமா லிவரிரு கூறுத
தோறறினா தோறறத தொன்மையை யறியார்
துணைமையும பெருமையுந தம்மில்
சாறறினா சாறறி யாறறவோ மெனனச
சரணகொடுத தவர்செயத பாவம
பாறறினர் போலும பநதணை நலலூா
நினறவெம பசுபதி யாரே. [9]

கலலிசை பூணக கலையொலி யோவாக
கழுமல முதுபதி தனனில
நலலிசை யாளன புல்லிசை கேளா
நறறமிழ ஞானசம பநதன்
பலலிசை பகுவாயப படுதலை யேநதி
மேவிய பநதணை நலலூர்
சொலலிய பாடல பததுமவல் லவர்மேற்
றொலலவினை சூழகி லாவே. [11]

திருசசிற்றமபலம.

இததிருபபதிகததில பததாவது செய்யுள மறைநது போயிறறு.

வாரக்கூட்டு வழிபாட்டினர்
சரக்கொன்றை யடியிலே



" வாழ்க! நீவிர், நீடூழி வாழ்க!! '

உ

திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த

தேவாரம்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நோதங்க மில்லாதார் நாகம் பூண்டார்
நூல்பூண்டார் நூன்மேலோ ராமை பூண்டார்
பேய்தங்கு நீள்காட்டி னட்ட மாடிப்
பிறைசூடுஞ் சடைமேலோர் புனலுஞ் சூடி
ஆதங்கு பைங்குழலாள் பாகங் கொண்டார்
அனல்கொண்டா ரந்திவாய் வண்ணங் கொண்டார்
பாதங்க நீறேற்றார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [1]

காட்லாற் கருதாதார் கடனஞ் சுண்டார்
களிற்றுரிவை மெய்போர்த்தார் கலனா தாக
ஓட்டலாற் கருதாதா ரொற்றி யூரார்
உறுபிணியுஞ் செறுபகையு மொற்றைக் கண்ணால்
வீட்டலாந் தன்செய்வார் பிட்வ மொந்தை
குடமுழவங் கொடுகொட்டி குழலு மோங்கப்
பாட்லா ராட்லார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [2]

பூதப் படையுடையார் பொங்கு நூலார்
புலித்தோ லுடையி னார்போ ரேற்றினார்
வேதத் தொழிலார் விரும்ப நின்றார்
விரிசடைமேல் வெண்டிங்கட் கண்ணி சூடி

ஓதத் தொலிகடல்வாய் நஞ்ச முண்டார்
உம்பரோ டம்பொன் னுலக மாண்டு
பாதத் தொடுகழலார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [3]

நீருலாஞ் சடைமுடிமேற் றிங்க ளேற்றார்
நெருப்பேற்றா ரங்கையி னிறையு மேற்றார்
ஊரெலாம் பலியேற்றா ரரவ மேற்றார்
ஒலிகடல்வாய் நஞ்ச மிடற்றி லேற்றார்
வாருலா முலைமடவாள் பாக மேற்றார்
மழுவேற்றார் மான்மறியோர் கையி லேற்றார்
பாருலாம் புகழேற்றார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [4]

தொண்டர் தொழுதேத்துஞ் சோதி யேற்றார்
துளங்கா மணிமுடியார் தூய நீற்றார்
இண்டைச் சடைமுடியா ரீமஞ் சூழ்ந்த
இடுபிணக் காட் டாடலா ரேமந் தோறும்
அண்டத்துக் கப்புறத்தா ராதி யானார்
அருக்கனா யாரழலா யடியார் மேலை
பண்டை வினையறுப்பார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [5]

கடமன்னு களியானை யுரிவை போர்த்தார்
கானப்பேர் காதலார் காதல் செய்து
மடமன்னு மடியார்தம் மனத்தி னுள்ளார்
மானுரிதோன் மிசைத்தோளார் மங்கை காண
நடமன்னி யாடுவார் நாகம் பூண்டார்
நான்மறையோ டாறங்க நவின்ற நாவார்
படமன்னு திருமுடியார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [6]

முற்றா மதிச்சடையார் மூவ ரானார்
மூவுலகு மேத்து முதல்வ ரானார்
கற்றார் பரவும் கழலார் திங்கள்
கங்கையாள் காதலார் காம்பேய் தோளி

பறருகும் பாகத்தா பால்வெண் ணீறருர்
பான்மையா லூழி யுலக மாஞர்
பற்ருர் மதிலெய்தா பைஙக ணேற்ருா
பலியேற்ரு பநதணை நல்லூராரே. [7]

கணணமரு நெற்றியார் காடடார் நாட்டார்
கனமமுவாட கொண்டதோர் கையார் சென்னிப்
பெண்ணமருஞ சடைமுடியார் பேரொன றில்லார்
பிறபபிலா ரிறப்பிலார் பிணியொன் றில்லார்
மண்ணவரும வானவரும மறறை யோரும
மறையவரும வநதெதிரே வணஙகி யேத்தப
பண்ணமரும பாடலார் பைஙக ணேற்ருர்
பலியேறருா பநதணை நலலூராரே. [8]

ஏறேறி யேழுலகு மேதத நினருா
இமையவாக ளெப்பொழுது மிறைஞச நினருா
நீறேறு மேனியாா நீல முணடாா
நெருபபுணடா ரங்கை யனலு முணடாா
ஆறேறு செனனியாா ராணைஞ சாடி
யனலுமிழு மைவா யரவு மாாததார்
பாறேறு வெணடலையார் பைங்க ணேற்ருா
பலியேற்ருா பநதணை நலலூராரே. [9]

கலலூாா கடிமதிலகண மூனறு மெய்தார்
காரோணஙு காதலாா காதல் செயது
நலலூராா ஞானத்தாா ஞான மாஞா
நானமறையோ டாறஙக நவினற நாவார்
மலலூாா மணிமலையின மேலி ருநது
வாளரக்கா கோனறலையை மாளச செற்றுப்
பலலூாா பலிதிரிவாா பைஙக ணேறருர்
பலியேறருா பநதணை நலலூராரே. [10]

திருசசிறறமபலம.

உ

திருப்பட்டீசுவரம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மௌனகுருசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்பந்தணைநல்லூர் பசுபதீசுரர் பதிகம்

கலிவிருத்தம்

பநதணை நலலூர்ப பசுபதி யடியிணை
சிநதிகக மனமே தீவினை தீரும
அநதியும பகலு மனபுடன வாழததி
வநதனை புரிய வனறுயா போமே. [1]


காலனைக காயநத கழலிணை சிநதி
யாலம துணடே யனபரை யனறு
பாலனொரு செய்த பநதணை நலலூா
மூல னெதிர்நது முததியீ டுவனே. [2]

சித்த விகறபச செயலதை விடடுச
சததிய மாகச சநததம வாழக
பததி புரிவாய பநதணை நலலூர்
அததன் கருணை யளிபபவ னனறே. [3]

வனபிணி தீர மலரடி சிநதி
பொன்புரை கொன்றை புனற்சடை சூடி
நனகுறு பநதணை நலலூா நாதன
அனபினைக கணடே யருளசெய குவனே. [4]

இனனொரு செனன மெடுககா தீங்கும
பனனும பநதணை நல்லூர்ப் பரனே
பொனனடி சோநது போற்றும பொருடடே
யுனனுவ னியானு முணாநதருள் புரியே. [5]

அன்னையராடிய பந்தா!



— அன்றிச் சோழன்
பகைமேலெறிந்த குண்டா!!

தீதே புரியுஞ் சிறியே னுனது
பாதாம் புயதகைப் பநதணே நல்லூர்
தாதா பணியத் தந்தருள புரிவாய்
வேதா வணங்கும் விரைமலர்ப பதனே. [6]

திஙகளு மரவு மத்தமுஞ் செஞ்சடை
கங்கையுஞ் சூடிய கணனுத லேயென
பஙகம தகறறிப் பநதணே நல்லூர்ச
சங்கர னேயுன் றுளிணை சேரே. [7]

அடியேன் றுயர முழுது மறிவை
கொடியேன மொழியாற கூறிற பயனென
படிபுகழ பநதணே நலலூர்ப பரனே
கடிகமழ காலென முடியிற் பொறியே. [8]

வினையேன் வினைபபயன் றீரா விடிலோ
அனைநிகர் பநதணே நல்லூாக கரசே
தனியே கிடநது தளர்நதுமுன் சாவேன
இனிதருள் புரிநதுன் னிணையடி சேரே. [9]

மநதிர மானவைந தெழுததினை நெஞ்சிற
சிந்தித் தனுதினஞ் செபித்தவா நாளும
பந்தம தொழிநது பநதணே நல்லூாச்
சுநதரன சேவடி துனனுவர் சுகமே. [10]

வாதமும பிததமு மன்னு சிலேதமமும
வேதனை செய்ய மெலிவினை யுற்றேன்
கோதறு பந்தணே நல்லூர்க குழகா
வாதனை தீர மாறறுதல் கடனே. [11]

திருசசிற்றம்பலம்.

திருப்பட்டீசுவரம்
ஸ்ரீலஸ்ரீ மௌனகுருசுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய

திருப்பந்தணைநல்லூர் காம்பனையதோளியம்மை பதிகம்

பூமாது நாமாது செயமாது சசிமாது
பொருவிலாத் துர்க்கைகாளி
புகழுகின்ற பூரணி நாரணி யபிராமி
பொறபிற சிறநதவல்லி
ஓமாதி மந்திரம துருவாகி யருவாகி
யுலகெலாம பூத்தசெல்வி
யுயிரினுக குயிராகி விளஙகுநல வமபிகை
யுனனுமடி யேனையுற்ற
காமாதி விகாரங்கண முழுதுமே நீங்கிடக்
கணமலர்கள் சாத்தியுன்றன்
கழலிணைகள பரவவே நலவாக் களிததுநற
காடசிதந் தாண்டருளுவாய்
பாமாலை சூடுநல் லன்பரைக காககினற
பராசகதி பத்ரகாளி
பநதணைநல லூரிலமர் காமபனைய தோளியே
பாமசுக மருளுமுமையே [1]

சதுர்மறைக ளோலமிடு திருவருட் செலவியே
சரணுபு யத்தைநாளுந
தநதென்னை ரட்சிகக விருமபியே நின்றனன்
சத்யமிது சதயமிதுகாண

பொதுவதனி னடனமிடு நின்கணவ னேயுனது
பொற்பினைக கண்டெநாளுமு
பூமிதனில் வையாது தனதுமடி மீதினிற்
பொலிவுற விருத்தலாலுன
விதவலங் காரமதை யெளியனுற புகலவே
விளங்காது சொல்வதென்னை
விதையைறி வார்களு மவரவர்க் கியன்றபுகழ்
விருமபியே துதிப்பர்கணடாய
பதியதனி லிப்பதிபோ லெப்பதியு மிலையெனப
பசுபதியு மெறறிவிடட
பநதணைநல் லூரிலமா காமபனைய தோளியே
பரமசுக மருளுமுமையே. [2]

அன்னையே நினசொரூப ஞானததி னழகோடு
மறபுதக காட்சியழகும
ஆடையணி திருமேனி யவயவத் தழகினையு
மறிவிலேன் புகழ்வதற்கே
பின்னுசடை முடியிலுறு பொன்மகுட வழகினெடு
பிறைநுதற் றிலதவழகும
பிறங்குநின் காதுகளி லுறுதோட்டி னழகோடு
பேசுமூக கணியினழகும
மன்னுதிருக கண்டமுறு பொட்டழகு சரட்டழகு
மாருத தாலியழகும்
மார்பிலுறு பதக்கமும் வளாகரக காப்பழகும்
வளையிடையி னெட்யாணமும
பனனரிய பாதமுறு சிலமபினெடு கொலுசழகும்
பார்த்துக் களிக்கவருவாய்
பநதணைநல் லூரிலமர் காமபனைய தோளியே
பரமசுக மருளுமுமையே. [3]

இருநாழி நெற்கொண்டு முபபத திரண்டறமு
மெக்காலும் வளர்க்குமுன்றன்
இருகையி னுவெணெயு மெடுத்தமு தருத்தியே
யினிதான மடியில்வைத்தே

பெரிதான பித்தநோய் சூலைநோய் குன்மநோய்
பேசரிய நோய்களெல்லாம்
பிடித்து வாட்டாமல் நீங்கும படிக்குநின்
பெருங்கருணை நோக்கம்வைப்பாய்
நரிநாயக ளுண்ணுமிவ வுடலதனை மெய்யென்று
நாளுமபி மானமுற்றே
நாடதனில வாழ்ந்துமெய்ஞ் ஞானநிலை யுணராத
நலமிலா மூர்க்கருடனே
பரிவோடு திரிந்துமென் பயனுகு மவர்களது
பக்கத்தி லென்னைவிடாதே
பந்தணைநல வூரிலமர் காமபணைய தோளியே
பரமசுக மருளுமுமையே. [4]

நல்லவரு டருவையோ நாயேனு முய்வனோ
ஞானவடி வானவமமே
நவிலகாமக குரோதலோ பங்களை யடைந்துநா
ளெலலாம போககிநினறேன
சொலலரிய சரியைநற கிரியையோகங்களொடு
தூஞான சுகமேவிலேன
சுத்தபரி பூரணி நிதயகல யாணிநற்
சூட்சும சொருபிநீயே
வெல்லரிய மாயைதனி லென்னையிட டாட்டியே
விளையாடல் செய்யவேணடா
வேதவொலி பாடுநின் பாதமதி லெந்நாளும்
வினையேனை வைக்கவேண்டும
பல்லுலகர் வாழத்தியுய்ந் ததுகண்டு நின்னடி
பரவினே னருள்புரிகுவாய்
பந்தணைநல் வூரிலமா காமபணைய தோளியே
பரமசுக மருளுமுமையே. [5]

வேதநெறி கன்மநெறி பததிநெறி நினறிலேன்
மெய்ஞ்ஞான நெறியுமறியேன்
விளங்குபல தர்மங்கள செய்திலே னன்றுக
மிகுபுணய பாவமறியேன்

கோட்டையுள்ளே சென்றதும் கோயிலின் முழுத்தோற்றம்



" சிவ சிவ "

"தங்கும் வெளியினில் கோடியண்டம்-இந்தத்
தாயின கைபபநதென ஓடுமடா!"



மக்களிசைக்கும் செல்லப்பெயர்-தோளியம்மை

ஓதரிய தீவினைகள் செய்தபய ளுடுமிவ்
வுடம்பினை யெடுத்துநாளும
உழலனு பவத்திறு னன்று வறிநதனன
உன்னடிக் கன்புபூணேன்
காதளவு நீடிருக கண்ணியே மஙகையர்க
கரசியே கருணையாலே
கடையேனு நின்னடிக் கன்புசெயும வணணமே
கிடாடசமவைத தாளுகண்டாய்
பாதமலா நாடுநற பத்தருக் கருள்செயும
பரமகல் யாணரூபி
பந்தணைநல் லூரிலமர் காம்பணைய தோளியே
பரமசுக மருளுமுமையே [6]

வேதவொலி கீதவொலி யாடலொலி பாடலொலி
மேவுநின் கோயிலவநது
விண்ணவர்கள மணணவாகள பண்ணவர்க ளியாருமுன்
மெலலடி பணிநதுவாழச
சோதிவடி வாகவே விளஙகுநல லமபிகை
சுகரூப மானவல்லி
சொலலரிய நாலவேத வுச்சியில விளஙகுநற
சொரூபியே! கருணைசெயவாய
சீதமதி வெவ்வரவு குளிரமதத மொடுசெறி
செழுஙகொனறை முடியிலுறறே
திகழவிரு கரமதனின மழுமா னணிநதவன்
தேவியுனை யிடததிலவைததே
பாதஙகள நோவா திருககச சமைககின்ற
படசமநின மகிமையலவோ
பநதணைநல லூரிலமா காமபணைய தோளியே
பரமசுக மருளுமுமையே. [7]

மருநதொனறு மிலலையோ பொருநதுநோய் தீர்ககவும
மனமதிற் கருணையிலலையோ
வஞ்சனே னென்னினும மஞசினே னஞசினேன்
வன்பிணிக் காறறகில்லேன.

அருந்தவர்க் கிரங்கிநல லருளபுரியு மமபிகை
அமரர்பணி கின்றவம்மே
அனறுவளர் காழியர் கவுணியக் கன்றினுக்
கருணஞான வமுதமுதவி
இருந்தமிழ் வேதமுறை பாடிடக் கேட்டுநல்
லின்புற்றிருநத தாயே
எளியனுக கிரஙகியே கருணைநோக கினலெனக
குறுபிணி யகற்றியாள்வாய்
பரிநதுநா வரையருறு சூலைமுன தீர்த்தநின்
படசம தெனக்குமவைப்பாய
பந்தணைநல் லூரிலமா காமபணைய தோளியே
பரமசுக மருளுமுமையே. [8]

தேவர்கண முனிவர்க ளசுரர்கள் சிததாகள்
திருந்துவிஞ் சையர்களோடு
சீர்பெற்ற கநதருவர்மா புத்திசாலிகள்
திகழுதிசைப் பாலரெல்லாம்
ஆவலுடன வநதுநின் னடியிணை பணிநதிட
அவரவர் குறைகளெல்லாம
அறைநதிடக் கேட்டுநீ யருள்செய்த தாகவே
அனநதமறை சொல்வதமமா
பூவுலகி னுயினேன வெமபிணியி னலவெமப்ப
பொறுககமுடி யாமலேயுன்
பொனனடிக கனுதினஞ் சொலலுவ தறிநதுமது
போகுமவழி கணபார்ததிலாய்
பாவியே னெனனினு மனனையே யுன்னையே
பறறினே னெனனையாளவாய
பநதணைநல லூரிலமா காமபணைய ளோதளியே
பரமசுக மருளுமுமையே. [9]

சநதத மனபாபலா வாழுததுமுன ருளிணை
தருசமென நமபிவநதே
தமியனேன மனககுறைகள சாறறியே போறறியுந
தானுள மிரஙகவிலையே

கந்தமலர் கொண்டுநின் னடிபணியு மன்பருக்
கருள்புரியு மெய்த்தெய்வமே
கடையனே னென்னினு முனதுதிரு வருட்பார்வை
காட்டவிது சமயமமமே
மந்தரமிகு நவகோண நாயகி திருவாணி
மலரயன முதலதேவர்கள்
கதிபெறுநின் மலர்ப்பாத மென்றலை வைத்தருளை
யுதவுமா னந்தவல்லி
பந்தமிகு மடியனேன் துயரோட்டு மாரணி
பட்சமிகு முமையம்மையே
பந்தணைநல லூரிலமா் காமபனைய தோளியே
பரமசுக மருளுமுமையே [10]


அளவிலா வேதமுத லாகம புராணமும
அனந்தவிதி காசமெல்லாம
அமமைநின நிலைமையை யளக்கமுடி யாததா
லடங்கியுன பதமலரிலே
உளருகிற வெறறுரையு முணமைநிலை காணு
துரைக்கினும பயனுயாகா
உணமைநிலை காணவே நின்கிருபை யாலெனக
குணமையை யுணாத்தவேண்டும்
களவுவஞ் சனைகளசெய் கருமிகளு முனறனது
கடாட்சவீட சணியமுறறே
கருதரிய பேரினப நிலைகண்டு கொளவார்கள்
கடையேனு மய்யவெணணிப்
பளபளென வொளிருநின் சொரூபவொளி காட்டியே
பட்சமுட னெனனையாளவாய்
பந்தணைநல் லூரிலமா் காமபனைய தோளியே
பரமசுக மருளுமுமையே [11]

மனமதனில் மேவிய விகாரம தடங்கியே
மாசறு மனததிலுன
மலரடியை யனுதினம நினைநதுநா னுயயவும
மாசற்ற வரமருளுவாய்

நினைவதனி லுறுகின்ற வினியபொருள் யாவையும்
  நின்மாயை யென்றுதள்ளி
நித்தியா னந்தசுக நிலையிலே நிற்கின்ற
  நின்னடிய ரேவல்செய்து
வினவரிய மெய்ஞ்ஞான வித்தைகண் டுய்யுமா
  விணனுளோ ரெவருமவந்து
விருமபிடும் நின்பாத வின்பதனை விட்டியான
  விடயமதி லுழலாமலே
பனகவணை மேறறுயி லரியயன் போற்றிடும்
  பசுபதிக் குகந்தசத்தி
பந்தணைநல் லூரிலமர் காமபனைய தோளியே
  பரமசுக மருளுமுமையே. [12]

திருச்சிற்றம்பலம

கிளிமொழி மங்கையரிருவர் மருங்கில் நிற்கச்
செம்பொன் மாமயிலேறிய கோலன்



ஆறுமுகப்பெருமான்

உ

திருப்பந்தணைநல்லூர்

முருகக் கடவுள் மீது

ஸ்ரீ அருணகிரிநாதர் இயற்றியருளிய

திருப்புகழ்

விநாயகர் துதி

தததன தனதன தத்தன தனதன
தத்தன தனதன தனதான

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன — அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக எனவினை — கடிதேகும
மததமு மதியமும் வைததிடும அரன்மகன்
மறபொரு திரள்புய — மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மடடவிழ மலர்கொடு — பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில
முற்பட எழுதிய — முதல்வோனே
முப்புரம எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த — அதிதீரா
அததுய ரதுகெட சுப்பிர மணிபடும
அப்புனம அதனிடை — இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் — பெருமாளே.

தனதந்தன தனதநதன தனதந்தன தான
தனதந்தன தனதந்தன தனதந்தன தான
தனதந்தன தனதந்தன தனதந்தன தான
— தனதான

இதசநதன புழுகுஞ்சில மணமுந்தக வீசி
யணையுநதன கிரிகொண்டிணை யழகும்பொறி சோர
இருளுங்குழல் மழையென்பந வரசங்கொளு மோகக்
— குயில்போலே

இடையுங்கொடி மதனன்தனை யிடுகுந்தள பார
இலையுஞ்சுழி துடைரம்பையு மமுதந்தட மான
இயலங்கடி தடமும்பொழி மதவிஞசைகள் பேசித்
— தெருமீதே

பதபங்கய மணையும்பரி புரமங்கொலி வீச
நடைகொண்டிடு மயிலெனபன கலையுஞ்சுழ லாடப்
பரிசுமபல மொழியுஞ்சில கிளிகொஞ்சுகை போலப்
— பரிவாகிப்

பணமுணடென அவலமபடு நினைவுண்டிடை சோர
இதுகணடவா மயலகொண்டிட மனமுஞசெயல் மாறப்
பகலுஞ்சில இரவுநதுயில் சிலவஞசகர் மாயைத்
— துயர்தீராய்

திதிதிநதிமி தனதந்தன டுடுடுண்டுடு பேரி
டகுடங்குகு டிகுடிங்குகு படகநதுடி வீணை
செகணஞ்செக வெனவுமபறை திசையெங்கினு மோதக
— கொடுசூரா

சிரமுங்கர வுடலுமபரி யிரதங்கரி யாளி
நிணமுங்குடல் தசையுங்கட லெனசெம்புன லோடச்
சிலசெமபுகள கழுகுஞ்சிறு நரியுங்கொடி யாடப்
— பொரும்வேலா

மதவெங்கய முரிகொணடவர் மழுவுங்கலை பாணி
யிடமன்பொடு வளருஞ்சிவை புகழ்சுந்தரி யாதி
வளருந்தழ லொளிர்சம்பவி பரைவிண்டிள தோகை
— தருசேயே

வதனஞ்சசி யமுதம்பொழி முலைநன்குற மாதொ
டிசையுஞ்சுரர் தருமங்கையொ டிதயங்களி கூர
வருபந்தணை நகர்வந்துறை விமலன்குரு நாதப்
— பெருமாளே. [1]

தனதன தந்த தனதன தந்த தனதன தந்த
— தனதான

இருவினை யஞ்ச வருவினை கெஞ்ச
இருள்பிணி துஞ்ச — மலமாய
எனதிடர் மங்க வுனதருள் பொங்க
இசைகொடு துங்க — புகழ்கூறித
திருமுக சுந்த்ர முருகக டம்ப
சிவசுத கந்த — குகவேலா
சிவசிவ என்று தெளிவுறு நெஞ்சு
திகழநட னஞ்செய் — கழல்தாராய்
மருதொடு கஞ்ச னுயிர்பலி கொண்டு
மகிழரி விண்டு — மருகோனே
வதைபுரி கின்ற நிசிசரர் குன்ற
வலம்வரு செம்பொன் — மயில்வீரா
அருகுறு மங்கை யொடுவிடை யுந்து
மமலனு கந்த — முருகோனே
அருள்செறி பந்த ணையிலிரு மங்கை
அமளிந லங்கொள — பெருமாளே. [2]

தனன தநதன தானன தானன
தனன தநதன தானன தானன
தனன தநதன தானன தானன
— தனதான

எகினி னம்பழி நாடக மாடிகள்
மயிலெ னுஞ்செய லா*ரகி நேரலகுல
இசையி டுங்குர லார்கட ணிகள — வெகுமோகம
எனவி ழுந்திட வாமுலை மேலதுகி
லலைய வுந்திரி வாரெவ ராயினு

* அகி = பாம்பு.

மிளகு கண்சுழல் வார்விலை வேசியர் — வலைவீசும்
அகித வஞ்சக பாவனை யால்மயல்
கொடுவி ழுநதிட ராகமு நோய்பிணி
யதிக முஙகொடு நாயடி யேனினி — யுழலாமல்
அமுத மநதிர ஞானொப தேசமு
மருளி யன்புற வேமுரு காவென
அருளபு குநதிட வேகழ லார்கழ — லருள்வாயே
ககன விஞ்சையா கோவென வேகுவ
டவுணர் சிநதிட வேகடல தீவுகள்
கமற வெந்தழல வேலவிடு சேவக — முருகோனே
கரிநெ டுமபுலி தோலுடை யாரெனை
யடிமை கொண்டசு வாமிச தாசிவ
கடவு ளெநதையர் பாகமவி டாவுமை — யருள்பாலா
செகமு மணடமு மோருரு வாய்நிறை
நெடிய அம்புயல மேனிய னரரி
திருவு றைந்துள மார்பக னர்திரு — மருகோனே
தினைவ னநதனில் வாழவளி நாயகி
வளாத னமபுதை மாாபழ காமிகு
திலக பநதனை மாநகா மேவிய — பெருமாளே. [3]

தநதன தனத்த தநதன தனதத
தநதன தனதத — தனதான

குமபமு நிகாதத கொஙகையை வளாத்த
கொஞசுகி ளியொதத — மொழிமாஞர்
குஙகும பணிகருள வணபுழு குவிடட
கொநதள கமவைதத — மடவார்பால்
வமபுகள விளைதது நணபுகள கொடுத்து
மஙகிந ரகத்தில் — மெலியாமல்
வணகயி லைசுற்றி வநதிடு பததைை
வநதனை செயபுத்தி — தருவாயே
பமபுந தியுறற பஙகொரு சமாத்தி
பணடுள தவத்தில் — அருள்சேயே
பைமபுய லுடுத்த தணடலை மிகுதத
பநதனை நகர்கரு — ஞறைவோனே

தேரிழுப்பதுண்டு — தெப்பமுமினி விடுவோம்



மாய்ந்துவரும் ஏ, இராணி மாடமே!
ஆற்றுவோம், தேற்றுவோம், அழகுற அமைக்கவும் செய்வோம்.

சமபுநி ழுலுக்குள் வந்தவ தரித்த
சங்கரர்த மக்கு — மிறையோனே
சஙகணி கரத்த ரும்பர் பயமுற்ற
சஞ்சல மறுத்த — பெருமாளே. [4]

தந்ததன தந்தனந் தனதனத்
தந்ததன தந்தனந தனதனத்
தந்ததன தந்தனந் தனதனத்
— தனதான

கெணடைகள்பொ ருங்கண்மங கையர்மலர்க்
கொண்டைகள குலுஙகநின் றருகினிற
கெஞ்சுபலு டனகுழைந தமளியிற கொடுபோய்வண்
கெநதபொடி யுமபுனைந் தரவணைத
தினபகல விகளதருந தொழிலடுக
கின்றஅறி விலனுறுந துயரற பரபைவீசும
தணடைகள கலின கலின் கலினெனக
கிண்கிணிகி ணினகிணின கிணினெனத
தணகொலுசு டன்சிலம பசையவுட பரிவாகிச
சநததமும வநதிடு பரிமளப்
பஙகயப தஙகளென் கொடுவினைச
சஞசலம லஙகெடும படியருட புரிவாயே
தொணடாகளச ரணசரண சரணெனக
கொமபுகளகு குஙகுகுங குகுமெனத
துநதுமிதி மிநதிமிந் திமினெனக் குறுமோசை
சுநதரிம ணஞ்செயுஞ் சௌரியக்
கநதகுற வஞசிதங கருவனத்
துஙகமலை யுமபுரந தமரருக் கிடர்கூருமப
பணடர்களபு யஙகளும பொடிபடக
கணடவப்ர சணடகுஞ சரியெழிற

பைந்தரு வனம்புரந் தகமெயிற் புடைசூழும்
பந்திவரு மந்திசெண் பகமகிற்
சந்துசெறி கொன்றைதுன் றியவனப்
பந்தணையில் வந்திடுஞ் சரவணப் பெருமாளே. [5]

தானதந்ததன தானதந்ததன
தானதநததன தானதந்ததன
தானதநததன தானதநததன
— தந்ததான

தேனிருநதஇத ழார்பளிங்குநகை
யார்குளிர்நதமொழி யார்சரங்கள்விழி
சீர்சிறநதமுக வாரிளமபிறைய தெனபுருவர்
தேனமர்நதகுழ லார்களஙகமுகி
னார்புயஙகழையி னார்தனங்குவடு
சேர்சிவநதவடி வார்துவணடஇடை புண்டரீசும
சூனியஙகொளசெய வாரரமபைதுடை
யார்சரண்கமல நேரிளமபருவ
தோகைசநதமணி வாருடனகலவி யின்பமுடே
சோகமுணடுவினை யாடி னுஙகமல
பாதமுமபுயமி ராறுமிநதுளபல
தோடலஙகலணி மாரபுமபரிவு ளஙகொளவேனே
ஓநமநதசிவ ரூபியஞசுமுக
நீலிகணடிகலி யாணிவிநதுவொளி
யோசைதஙகுமபி ராமியமபிகைப யநதவேளே
ஓலமொனறவுணர் சேனைமஙகையர்கள
சேறுடனகுருதி யோடஎணடிசையும
ஓதுகெநதருவர் பாடநினறுநட னஙகொளவேலா
ஏனல்மஙகைசசி ஞானரமபையென
தாயிசநதரமுக பாவைவஞசிகுற
மாதெடுமபாதரு மானணைநதழகி லஙகுமாாபா
ஏர்கரந்தையறு கோடுகொனறைமதி
ஆறணிந்தசடை யார்விளஙகுமெழி
லீறிலபந்தணைநல் லூரமர்நதுவளர் தமபிரானே. [6]

"தங்கும் வெளியினில் கோடியண்டம்- இந்தத்
தாயின கைப்பந்தென ஓடுமடா!"



மக்களிசைக்கும் செல்லப்பெயர்-தோளியம்மை

பந்தணைநத காட்டில் பாம்பணிந்தோன மருங்கில்
கோயில கொண்ட பாம்பணைந்தோன



ஸ்ரீ ஆதிகேசவபெருமானின் ஆலய முன வாயில்


தனதந் தத்தன தனந்த தானன
தனதந் தத்தன தனந்த தானன
தனதந் தத்தன தனந்த தானன
— தனதான

மதியஞ் சத்திரு நிறைந்த மாமுக
மயிலஞ் சக்கிளி யினங்க ளாமென
மதுரஞ் செப்பிய மடந்தை மேனகை ரதிபோலே
மருவும் பொற்குட மெழுந்த மாமுலை
வளர்வஞ் சிக்கொடி நடந்த வாறென
வருதுங் கக்கட லணங்கு போல்பவர் தெருவூடே
நிதமிந் தப்படி யிருந்து வாறவர்
பொருதங் கப்†பணி கலந்து போய்வர
நெறிதந் திட்டவர் வசங்க ளாமெனவுழலாதே
நிதிபொங் கப்பல தவங்க ளால்நனி
மொழியும புத்திகள தெரிநது நாஹனே
நிகர்சந தததமிழ சொரிநது பாடவு மருள்தாராய்
நதிமிஞ சச்சடை விரிந்த நாயக
னுமையன் பிறசெயு மிகுநத பூசனை
நலமென் றுடகுளிா சிவனப ராபர னருளபாலா
நவகங கைககிணை பகாநத மா+மணி
நதிபங கிறகுல வு*கநது காபுரி
நகர்பொங கிததழை யவநது வாழவுறு முருகோனே
கெதிதங கத்தகு கணஙகள வானவ
ʅ ரிகஞ சத்தவர் முகுநதா நாவலா
கிளைபொங ககருபை புரிநது வாழகென அருளநாதா
கெருவம பற்றிகல விளைநத சூரொடு
தளமஞ சப்பொரு தெழுநது தீயுகள
கிரவுஞ சககிரி வகிாநத வேலுள பெருமாளே. [7]

திருச்சிற்றமபலம.

---

† பணி = பண்ணி
\+ மணிநதி = மண்ணியாறு
* கந்துகாபுரி = பந்தணைநல்லூர் கந்துகம = பநது
ʅ அரி = இநதிரன்



உ

சிதம்பரம்

ஸ்ரீ இராமலிங்க அடிகளார்

அருளியது

கொந்தணவுங் கார்குழலாள் கோலமயில் போலுலவும்
பந்தணை நல்லூர் நின்றவெம் பசுபதியாரே.

திருச்சிற்றம்பலம்

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

— திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்.